Registered as a Newspaper

பக்கங்கள் – 12


விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 191

செவ்வாய்க்கிழமை
04 ஜூன் 2024

முச்சந்தி முரளி



"பொதுவேட்பாளர் எண்ட விசயத்தை வைச்சு இன்னும் எத்தினை நாளைக்குத்தான் பிடுங்குப்படப்போயினமோ?"



# தேர்தலைப் புறக்கணிப்பதும் பொதுவேட்பாளரும் ஒன்றல்ல

## சுரேஷ் விளக்கமளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 4**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதும் தேர்தலைப் புறக்கணிப்பதும் ஒன்று என்று கூறுவது தவறானது. அது மக்களைத் திசைதிருப்புவதற்காகச் சொல்லப்படும் பொய். இரண்டும் வெவ்வேறானவை என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

☞ 11

மயிலத்தமடு போராட்டம்

## கைதான மாணவர்கள் வழக்கில் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜூன் 4

மட்டக்களப்பு – மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் இடம்பெற்றுவரும் சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மாதவனைப் பகுதியில் இடம்பெற்றுவரும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், கால்நடைகள் வெடிவைத்துக் கொல்லப்படுகின்றமைக்கு எதிராகவும் கடந்த வருடம் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

☞ 11

## பல்கலைக்கழக அனுமதி கையேடுகள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 4

2023 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவங்களை (அனுமதிக் கையேடுகளை) விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன – என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்

☞ 11

## எரிவாயு விலை இன்று குறையும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

லிட்ரோ எரிவாயுவின் விலை இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல்

☞ 11

வடமாகாணப் பாடசாலைகளில்

## உயர்தர வகுப்புகள் இன்று ஆரம்பம்

வடக்கு கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடமாகாண பாடசாலைகள் இன்று நடைபெறும் எனவும் புதிய உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று முதல் ஆரம்பமாகும் எனவும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் அறிவித்துள்ளார்.

☞ 11

## மோடியின் தலை தப்புமா?

புதுடில்லி, ஜூன் 4

இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகவுள்ளன. தேர்தல் முடிவுகள் தொடர்பில்

☞ 11

## கனடாவைச் சேர்ந்தவரிடம் ஒன்றரைக் கோடி மோசடி!

யாழ்ப்பாணம், ஜூன் 4

கனடாவைச் சேர்ந்தவரிடம், தன்னை ஒரு மருத்துவர் என்று போலியாக அடையாளப்படுத்தி ஒன்றரைக் கோடி ரூபாவை மோசடி செய்த நபரொருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

☞ 11



## பல்கலை அனுமதி; வடக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

இலங்கையில் ஏனைய மாகாணங்களை விட பல்கலைக்கழக அனுமதி கூடுதலாக கிடைக்கப்பெற்று வடக்கு மாகாணமே முதல் நிலையில் உள்ளது என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த வருடம் வடக்கு மாகாணத்தில் பாடசாலை பரீட்சார்த்திகள் 524 பேர் '3 ஏ' சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர். மாகாணம் தழுவிய ரீதியில் கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் 118 மாணவர்கள் அதிகமாக '3ஏ' சித்திகளைப் பெற்றுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-26)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் எம்.பி.க்கள் மூன்று பேருக்கு ஜனாதிபதி விசேட நிதி ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின்பேரில் ஜனாதிபதி அலுவலகத்தால் விசேட நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பிரிவால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவருக்கும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கும் விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுக்கு 146 திட்டங்களை யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 11 பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்த 47 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் 97 திட்டங்களை யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 13 பிரதேச செயலர் பிரிவுகளில் நிறைவேற்றுவதற்காக 21.450 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 25 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு ஒதுக்கப்பட்ட நிதி எத்தனை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று இந்த 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்திவரும் நிலையில், ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்காது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் விசேட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளமை சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. (எ-125-26)



# தமிழ்ப் பொதுவேட்பாளர் கல்லில் நார் உரிப்பதே!

## வினோநோகராதலிங்கம் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 4

**தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று. அது தெரிந்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களே பிரபாகரன் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்தவர்கள்.**

- இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒன்றிணைந்து ஒரு தலைமையைத் தேர்ந்தெடுக்க முடியாதவர்கள் ஓரணியாகச் செயற்பட முடியாதவர்கள் மக்களை ஒன்றுபடுத்தப் போகின்றனர் என்று கூறுவது வேடிக்கையானது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு என்பது எனது தனிப்பட்ட கருத்து.

தமிழ்த் தேசியக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் ஒன்றுபடப் போவதில்லை. அவர்கள் ஒன்றுபட்டு நின்று தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தினால் அதற்கு ஆதரவாகப் பரப்புரைகளை மேற்கொள்ள நான் மட்டுமல்ல, தமிழ் மக்களும் ஒன்றுபடுவார்கள். வெற்றியும் பெறலாம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு நிலைப்பாடு, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இரு வேறு நிலைப்பாடுகள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு நிலைப்பாடு என்று நிலைமை இருக்கின்றது. தங்கள் பதவிப் போட்டிகளைத் தீர்க்கமுடியாத கட்சிகள் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறுவது ஏமாற்று வேலையாகும்.

மொத்தத்தில் சஜித், ரணில், அநுர, பகிஷ்கரிப்பு, தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற ஐந்து முடிவுகளைத்தான் தமிழ் மக்கள் பகிர்ந்துகொள்ளப் போகின்றனர். மக்களின் இந்த நிலைமைக்குத் தமிழ்க் கட்சிகளைத் தவிர வேறு யாரும் காரணமாக இருக்க முடியாது.

பொதுவேட்பாளர் என்ற விடயம் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கும். யார் வேட்பாளர், எந்தக் கட்சியில் போட்டியிடுவது, வடக்கைச் சேர்ந்தவரா? கிழக்கைச் சேர்ந்தவரா?, ஆணா? பெண்ணா? என்ற பல விடயங்கள் இருக்கின்றன. அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஓரணிக்கு வராவிட்டால் தமிழ் மக்கள் வெவ்வேறு தீர்மானங்களை எடுப்பார்கள். மக்கள் மனங்களை, மக்களின் நாடித்துடிப்பைக் கண்டறிந்து முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

அம்பாறை பறிபோய்விட்டது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோய்விடும். கட்சிகள் பிரிந்து நின்றால் வன்னியிலும் இதே நிலைமைதான். நிலைமை இப்படியிருக்க ஜனாதிபதித் தேர்தலில் எவர் வென்றாலும் எதுவும் நடக்கப்போவதில்லை. முட்டாள்தனமான முடிவுகளை எடுக்காது புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (எ-56)

# நளின் எம்.பி.யின் வாகனம் விபத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின்பண்டார பயணித்த ஜீப் வண்டி விபத்துக்குள்ளாகியுள்ளது. கொழும்பு-கண்டி பிரதான வீதியில் கொங்கஸ்தெனிய சந்திக்கு அருகில் நேற்று அதிகாலை இந்த விபத்து நடந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் ஜீப் வண்டி கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த நிலையில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

# ஐ.ம.ச.வுடன் கூட்டணிக்கு ஆராயும் ஐ.ம.சு.முன்னணி



கொழும்பு, ஜூன் 4

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சாதகமாகப் பரிசீலித்து வருகின்றது என்று அதன் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே இந்தக் கூட்டணி முயற்சி இடம்பெறுகின்றது. ஆளுங்கட்சியுடன் எவ்வித கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபட தமது தரப்பு எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

# தேர்தல் ஒத்திவைப்பு ஐ.நாவிடம் கடிதம்!

தேர்தல்களைப் பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளைக் கண்டித்து கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் சிவில் சமூக பிரதிநிதிகள் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளனர். நாடாளுமன்ற - ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளதை தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளசிவில்சமூகப்பிரதிநிதிகள் பாலித ரங்கே பண்டாரவின் கருத்தை ஜனநாயக விரோத கருத்து என குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

# மின்சாரசபை சட்டவரைவை எதிர்ப்பதற்கு ஐ.ம.ச. தீர்மானம்

கொழும்பு, ஜூன் 4

இலங்கை மின்சாரசபை சட்டவரைவுக்கு எதிராக வாக்களிப்பதற்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

-இவ்வாறு அந்தக் கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சட்டவரைவு தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு, எதிர்வரும் 4 ஆம் திகதி காலைதான் சபாநாயகரால் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும். இந்த நிலையில் 6 ஆம் திகதி விவாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால எல்லை, ஆய்வுக்குப் போதுமானதா? இல்லை. எதற்கு எடுத்தாலும் கையை உயர்த்தக்கூடிய மொட்டுக் கட்சி உறுப்பினர்களை வைத்து இந்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.

இந்தச் சட்டவரைவு ஊடாக இலங்கை மின்சாரசபை பல கூறுகளாகப் பிரிக்கப்படும் அபாயம் மட்டுமே உள்ளது. ஆனால் மின் கட்டணம் குறையப்போவதில்லை. தனது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு நிறுவனத்தையும் விற்கவில்லை என மஹிந்த ராஜபக்ச மார்தட்டுகின்றார். இந்தச் சட்ட வரைவு தொடர்பில் மஹிந்த ராஜபக்சவின் நிலைப்பாடு என்ன? - என்றார். (எ-44)



# அரசியல்வாதிகள் மீள ரவுடித்தனம்!

## சாடுகிறார் அநுர

கொழும்பு, ஜூன் 4

'அரகலய' வுக்குப் பின்னர் பதுங்கிய ஊழல் மற்றும் ரவுடித்தனமான அரசியல்வாதிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'அரகலய'வின் உண்மையான அபிலாஷைகள் நிறைவேற வேண்டுமானால், மக்கள் எழுச்சியின் உண்மையான நோக்கத்தைப் பேணுகின்ற அரசாங்கமொன்று நிறுவப்படவேண்டும்.

அரசியல்வாதிகள் 'அரகலய'வில் இருந்து பாடம் கற்கவில்லை. மாறாக போதைக்கு அடிமையானவர்களின் எழுச்சி எனக்கூறி மக்களின் எழுச்சியை அவமானப்படுத்துகின்றனர் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் நலன்களைக் கருதி போராட்டத்தைக் கைவிடுக

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 4

**நாளைய தலைவர்களின் எதிர்காலம் கருதி தொழிற்சங்க நடவடிக் கையைக் கைவிட்டு அனைத்துத் தரப்பினரும் உடனடியாகப் பணிக்குத் திரும்பவேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பணித்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது-

பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங் கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பள முரண்பாடு உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 27 நாள்களாகப் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர். கல்வி அமைச்சின் அறிவு றுத்தல்களுக்கமைய இது தொடர்பாகப் பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தொடர்சியாக ஆராய்ந்த அமைச் சரவை, நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. இதன்மூலம் உங்களுக்குப் பொருத்தமான தீர்வு கிட்டும் என நம்பப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டத்தால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். நாட்டின் நற்பிரஜைகளாக உங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு, பல்கலைக் கழகங்கள் இடையூறின்றி இயங்குவதற்காக உடனடியாகப் பணிக்குத் திரும்பவேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (ஏ-125-26)

# அரசிடம்விடாப்பிடியில் கல்விசாரா ஊழியர்கள்

கொழும்பு, ஜூன் 4

2025 வரவு-செலவுத் திட்டத்தில் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர் கள் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று கல்வியமைச்சு விடுத்த கோரிக்கையை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நிரா கரித்துள்ளனர்.

எமது பணிப்புறக்கணிப்பு மாணவர்களுக்கு மிகவும் நெருக்க டியை ஏற்படுத்தியுள்ளமையை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆயினும் காலவரையற்ற வேலைநிறுத்தமே எமது ஊதியப் பிரச்சினைக்கு எங்களின் கடைசி முயற்சியாகக் காணப்படுகி றது. சம்பள முரண்பாடுகளை அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சரிசெய்வதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவுக்கு தொழிற்சங்கங்கள் ஆட்சேபனை இல்லை, ஆனால் அரசாங்கம் அதற்கான சுற்றறிக்கையை வெளியிடவேண்டும் என்றும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தி யுள்ளன. (ச-6)

# காலி, மாத்தறை பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஜூன் 4

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இன்றும், நாளையும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்க ளில் உள்ள அனைத்துப் பாடசாலை களுக்கும் விடுமுறை வழங்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கல்வி அதிகா ரிகளுடன் நடத்திய கலந்துரையாட லில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (எ-இ)

# களுகங்கை நீர்மட்டம் உயர்வு

களுகங்கையின் நீர் மட்டம் எல்ல காவ பிரதேசத்தில் 12.38 மீற்றராக உயர்ந்துள்ளமையால் பெரும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்து வரு வதால் கிளை ஆறான குடா கங்கை, மில்லகந்த பகுதியில் தொடர்ந்தும் பெரும் வெள்ளப் பெருக்காகக் காணப்படுகின்றது என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

கல்விசாரா ஊழியர் போராட்டம்

# பல்கலை விரிவுரைகள் நிகழ்நிலையில் நடக்கும்

கொழும்பு, ஜூன் 4

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொடர் பணிப்புறக்க ணிப்பால் பல்கலைக்கழகக் கட்டமைப்பு வீழ்ச்சியுறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேராதனை, களனி பல்கலைக்கழகங்களின் பட்டமளிப்பு விழாக்கள் மறுஅறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பட்டப்ப டிப்பை முடித்தவர்கள் பட்டப்படிப்புச் சான்றிதழ் மற்றும் கல்விப் பதி வுகளைப் பெற முடியாமல் தவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்த வேலைநிறுத்தம் பல்வேறு வழிகளிலும் மாணவர்களை கடு மையாகப் பாதித்துள்ளது. இந்த நிலையில் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு காரணமாக விரிவுரைகளை ஒன்லைனில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-6)

# பிரிட்டன் அரசருக்கு ஜனாதிபதி அழைப்பு

பிரிட்டன் அரசர் மூன்றாவது சார்ள்ஸை இலங்கைக்கு வருகை தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். கடந்த 30 ஆம் திகதி பக்கிங்ஹாம் அரண்மனையில் இடம்பெற்ற பிரித்தானிய அரசர் மூன்றாவது சார்ள் ஸின் பதவியேற்பு விழாவில் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் ரோகித போகொல்லாகம கலந்துகொண்டார். இதன்போது பிரித்தானிய அரசர் மூன்றாவது சார்ள்ஸுக்கு ஜனாதிபதியின் வாழ்த்துகளைத் தெரிவித்த ரோகித போகொல்லாகம, பிரித்தானிய அரசர் மூன்றாவது சார்ள்ஸை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை அவரிடம் தெரிவித்தார். (ச-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினம் தெரியுமோ?

**செம்மனச்செல்வியிட்ட கூலியா புட்டை வாங்கித் திண்டிட்டு, அந்தப் புட்டுச் செமிக்கிறதுக்காக வாவது வேலை செய்யாமல் வலு கலாதியா படுத்து நித் திரை கொண்டதுக்காக ஆனானப்பட்ட சிவபெரு மானே, அரசன்ர பிரம்பால அடிவாங்கினவர். அப்பிடிப் பட்ட அரசன்ர காலத்தில இருந்திருந்தா, சிவபெருமான் வாங்கினதைவிட எங்கட அரசாங்க உத்தியோகத்தர் மார் பிரம்பால ஒவ்வொருநாளும் வாங்கிக் கட்டி யிருப்பினம். அந்தளவுக்கு இருக்குது அவையின்ர வேலை செய்யிற சீத்துவம். உதாரணத்துக்கு ஒண்டை இப்ப சொல்லலாம்.**

**கிட்டடியில குப்பிளானில இருக்கிற பள்ளிக்கூடம் ஒண்டிலரண்டு பிள்ளையளுக்கு ரீச்சர் அடிச்சுப்போட்டா. அதுவும் அங்க வழமையாப் படிப்பிக்கிற, அரசாங்கச் சம்பளம் வாங்கிற ரீச்சருக்கு தன்ர வகுப்பில இருக்கிற பதினைஞ்சு பிள்ளையளைக் கவனிக்கக் கடும் கஷ்ட மாம். அதால அவா தனக்கு உதவியா ஏ.எல். எடுத்த பிள்ளை ஒண்டை தற்காலிகமாக அங்க படிப்பிக்க வைச் சிருந்திருக்கிறா. அப்பிடி அங்க ரெம்பிறரியா படிப்பிக்கிற ஒரு தொண்டர் ஆசிரியர்தான் இப்பிடி பிள்ளையைப் போட்டு அடிச்சதாம். வகுப்புக்குப் பொறுப்பான, பதி னைஞ்சு பிள்ளையளைக் கவனிக்க ஏலாத அந்த ரீச்சரும் இந்தப் பிள்ளையளுக்கு அடிக்கிறதில எந்தக் குறையும் வைக்கிறேலையாம். அவா நடத்துற ரியூ சனுக்கு இந்தப் பிள்ளையள் போகாததுதான் இந்த 'விசேட பூசைக்கு' காரணம் எண்டு சொல்லுகினம்.**

**இப்பிடி பிள்ளையளுக்கு அடி விழுந்ததை எல்லா ரும் சேர்ந்து முதலில மறைக்கத்தான் பார்த்தவை. 'அது ரீச்சர் அடிக்கேலை, பிள்ளையள் தங்களுக்குள்ள அடிபட்டதை இப்பிடி மாத்திச் சொல்லுகினம்' எண்டு வலயக் கல்விப்பணிப்பாளரே, முழுப்பூசணிக்காயை சோத்துக்க மறைக்க வெளிக்கிட்டவர். கடைசியில அந்தப் பிள்ளையளின்ர பெற்றோர், பள்ளிக்கூடத் தில முறைப்பாடு செய்துபோட்டு, அப்பிடியே அந்தப் பள்ளிக்கூடம் எந்தப் பிரதேச செயலகத்துக்க வருகுதோ அங்கபோய், சிறுவர் உத்தியோகத்தரிட்டையும் புகார் குடுத்திருக்கினம். அதோட நிக்காமல் அவை நடந்த சம்பவத்தை பேஸ்புக்கில போட்ட பிறகுதான் பள்ளிக் கூடப் பிரின்சிபலில இருந்து சிறுவர் உத்தியோகத்தர் வரை எல்லாரும் பதறியடிச்சுக்கொண்டு, இந்தப் பிரச்சினையை அலசி ஆராய்ஞ்சு நடவடிக்கை எடுக்க வெளிக்கிட்டிருக்கினம். இதைப்பற்றி விசாரிக்க சிறுவர் உத்தியோகத்தர் பள்ளிக்கூடத்துக்குப்போய், அதிபரை யும் ரீச்சர்மாரையும் விசாரிச்சுப்போட்டு, தன்ர அறிக்கையை எழுதிக்கொண்டு போட்டாராம். பாதிக் கப்பட்ட பிள்ளையளின்ர வீட்டைபோய் என்ன நடந் தது எண்டு அந்தச் சிறுவர் உத்தியோகத்தர் விசாரிக் கேலை. ஏனெண்டு கேட்டால், 'எனக்கு அவையின்ர அட்ரஸ் தெரியாது, அதால போய் விசாரிக்கேல' எண்டு பதில் சொல்லியிருக்கிறார். தன்னட்ட முறைப்பாடு செய்யவந்த பெற்றாரிட்ட அவையின்ர அட்ரஸையே வாங்கி வைக்காத அளவுக்குத்தான் அவரின்ர அக் கறை இருந்திருக்குது. அதுக்குப் பிறகு கூட, ஆரிட்டை யும் விசாரிச்சாவது பிள்ளையளின்ர வீட்டைக் கண்டு பிடிப்பம் எண்டு உத்தியோகத்தர் நினைக்கவேயில்லை. அறிக்கை எழுத விசயம் கிடைச்சா எதுக்கு வீணா அலையவேணும்? எண்டு நினைச்சாரோ, என்னவோ. உப்பிடியான ஆக்களுக்கு சிவபெருமானுக்கு பிரம்பால வெளுத்த அரசரைக் கொண்டந்துவிட்டால் தான் கொஞ்சமெண்டாலும் வாங்கிற சம்பளத்துக்காவது ஏதும் செய்வினம் கண்டியளோ.**



-பட்சி

padsi@uthayan.com

# தடுமாறி வென்றது மேற்கிந்தியத் தீவுகள்



ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பலத்த போராட்டத்தின் பின்னர் பப்புவா நியூகினியா அணியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பப்புவா நியூகினியா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. சேசே பவு அரைச்சதம் கடந்தார்.

137 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு, பப்புவா நியூகினியா அணி நெருக்கடி கொடுத்தது. விக்கெட்டுகள் சீராக வீழ்த்தப்பட ஒரு கட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தோல்வியின் விளிப்புக்குச் சென்றது. ஒருவாறு 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 5 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. (எ)

## ஓமானை வீழ்த்தியது நமீபியா



ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் ஓமானை சுப்பர் ஓவரில் வீழ்த்திய நமீபியா அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நமீபியா அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. தனது முதல் இரு பந்துகளிலும் இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் நமீபியா வீரர் ரூபன் டிரம்பிள்மேன்.

19.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது ஓமான் அணி.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அதையடுத்து ஆட்டம் சுப்பர் ஓவருக்குச் சென்றது. சுப்பர் ஓவரில் ஓமானுக்கு 22 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 11 ஓட்டங்களால் வெற்றி பெற்றது நமீபியா அணி. (எ)

## குடிதண்ணீருக்குத் தவிக்கும் அக்கராயன் கிராம மக்கள்

கிளிநொச்சி, ஜூன் 4

அக்கராயனில் இதுவரை முன்னெடுக்கப்பட்டுவந்த குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது என்றும், குடிதண்ணீரைத் தொடர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

இதுவரை காலமும் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள நீர்த்தாங்கியில் இருந்து குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகக் குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. அந்தப்பகுதியில் வாழும் 250 வரையான குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் பாதிப்புகளை



எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக, பொதுமக்களால்கரைச்சிப் பிரதேச செயலாளர், கிராம அலுவலர் ஆகிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர். (ப-13)

## உடைமையில் கசிப்பு இருவர் கைது



யாழ்., ஜூன் 4

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு நீதிமன்று பிணை அனுமதி வழங்கியுள்ளது என்று மானிப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாருக்குக்கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து ஆயிரத்து 500 மற்றும் 750 மில்லி மீற்றர் கசிப்பை மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் கடந்த சனிக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என்றும், அவர்களுக்கு நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-125)

## போதைக்கு அடிமையான இளைஞர் கந்தகாட்டுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 4

போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கட்டுடையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கஞ்சாவுக்கு அடிமையாகியிருந்தநிலையில், அவரது தாய் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அதையடுத்து அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவரை கந்தகாடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ப-125)

## பாடசாலைகளுக்கு அருகில் அதிஅபாய மரங்கள்

தலைநகர் கொழும்பில் பிரதான பாடசாலைகளுக்கு அருகில் அதி அபாயமான 40 மரங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் கொழும்பு மாநகரசபைக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று, அகில இலங்கை மாவட்ட பாடசாலை சிறுவர் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் என். எம்.கே.ஹரிச்சந்திர பத்மசிறி தெரிவித்துள்ளார்.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அண்மையில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களிலும் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால், தமது சங்கம் இது தொடர்பில் அறியப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(எ-இ

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். தந்தைவழி உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். மற்றவர்களுக்குக் கொடுத்து வராமல் இருந்த கடன் திரும்பக் கிடைக்கக்கூடும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**மகரம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். வியாபாரம் விறுவிறுப்பாக நடப்பதுடன், லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதுடன் அவர்கள் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# இயற்கையை நீ அழித்தால்...!

இலங்கையை சீரற்ற காலநிலை ஆட்டிப்படைக்கின்றது. தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பிலும் மலையகத்திலும் மோசமான காலநிலை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. வெள்ளப் பேரிடரால் இதுவரை 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 5 பேர் வரையில் காணாமற்போயுள்ளதாகவும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம். கன மழையால் ஆறுகளின் நீர்மட்டமும் அதிகரித்து வெள்ளப்பெருக்கு இடர் ஏற்பட்டுள்ளது. இன்னமும் வெள்ளம் வடியாத நிலையில் மக்கள் வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்து இடைத்தங்கல் நிலையங்களில் தங்கியுள்ளனர். இந்த வெள்ளப் பெருக்கால் சொத்து அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. மீட்பு நடவடிக்கைகளில் முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சேதமடைந்த வீடுகளை மீளவும் அமைத்துக் கொடுப்பதற்கு முப்படையினரும் களமிறக்கப்படுவர் எனவும், இரண்டு மாதங்களுக்குள் அவை அமைத்துக் கொடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பு அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றார். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்கவும் அவர் பணித்திருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் காலம் என்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளும் விரைந்து கிடைக்கப்பெறும் என நம்பலாம்.

ஆனால், இந்த இடரால் உயிரிழந்தவர்களின் உயிர்களை மீளக்கொடுக்கமுடியாது. அந்த இழப்பை எவராலும் சரி செய்யவும்முடியாது. 2004 ஆம் ஆண்டு இலங்கையை சுனாமிப் பேரிடர் தாக்கிய பின்னர் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் இலங்கையில் உருவாக்கப்பட்டது. இடர்களை முற்கூட்டியே கண்டறிந்து இழப்புகளைத் தடுப்பது - தணிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. அதேபோல செயற்கை நுண்ணறிவுத்துறையில் இன்றைய உலகம் கொடிகட்டிப் பறக்கின்றது. வானிலை எதிர்வுகூறல்களை துல்லியமாக வழங்கக்கூடியளவுக்கு உலகம் போய்க் கொண்டிருக்கின்றது. இப்படியிருந்தும் 15 உயிர்களை இந்த இடர் காவு வாங்கியிருக்கின்றது. இங்கேதான் இயற்கை என்ற சக்திக்கு முன்னால் மனிதனின் கண்டுபிடிப்புகள் உட்பட எல்லாம் தோற்றுப்போகின்றன. இடர் தொடர்பான முன்னெச்சரிக்கைகள் போதுமானளவு விடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இப்போது முன்வைக்கப்படுகின்றது. அவை எல்லாவற்றுக்கும் மேலாக ஏற்படப்போகும் பேரிடரை துல்லியமாகக் கணிக்கமுடியவில்லை. எவ்வளவுதான் தொழில்நுட்பம் வளர்ந்திருந்தாலும் பேரிடரை துல்லியமாகக் கணித்து அதைத்தடுக்க முடியவில்லை.

இயற்கையை சீண்டியதன் விளைவுகளை இலங்கை மட்டுமல்ல உலகம் முழுவதும் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இயற்கை வளங்களை அடுத்த சந்ததிக்கு கையளிக்காமல் முழுவதையும் நாமே நுகர முற்படுகின்றோம். அளவுக்கு அதிகமாக இயற்கை வளங்களை நுகர்வதால், இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. 'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்' என்பதைப்போல, பல தடவைகள் பட்டும் திருந்தாதவனாக மனிதன் இருக்கின்றான்.

இந்தப் பேரிடர் எம்மைத் தாக்காது என்று நாம் நினைக்கமுடியாது. எம்மை நோக்கியும் அது வந்து கொண்டிருக்கின்றது. நாமும் எங்களின் வளப் பாதுகாப்புக்காக முன்னோர் அமைத்த அரண்களை எல்லாம் தகர்த்துக்கொண்டிருக்கின்றோம். பணத்தை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு பூநகரியில் சிமெந்து தொழிற்சாலை அமைக்க முயற்சிக்கப்படுகின்றது. அனுமதிக்கப்பட்ட அளவை விடுத்து அதிகளவில் மணல் அகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. சவுக்கு உள்ளிட்ட மரங்களுக்கு தீ வைத்து அழிக்கின்றோம். இப்படி இயற்கையை நாமும் சீண்டிக்கொண்டுதான் இருக்கின்றோம். இதற்கு மேலதிகமாக அரசியல்வாதிகளும் அவர்களுக்குச் சேவகம்செய்யும் அதிகாரிகளும் இயற்கையை வகைதொகையின்றி அழித்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்படியான நிலைமை தொடருமானால், உலகில் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் இயற்கைப் பேரிடர் நாளை எம்மண்ணிலும் நடக்கலாம்.






# இலங்கைக்கு 300 மில். டொலர் ஆராயவுள்ளது நாணயநிதியம்

கொழும்பு, ஜூன் 4

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் 2ஆம் கட்ட மதிப்பாய்வு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச்சபை கூட்டத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி ஆராயப்படவுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுச் சபைக் கூட்டம் சீசெல்ஸில் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை தொடர்பான மதிப்பாய்வு எதிர்வரும் 12ஆம் திகதி ஆராயப் படவுள்ளது.

அதேவேளை, இந்த மதிப்பாய்வின் பின்னர் இலங்கைக்கான 300 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-இ)

## 'பரசெற்றிக்' அமிலத்துக்கு தட்டுப்பாடு

மருத்துவ உபகரணங்களை தொற்று நீக்கும் 'பரசெற்றிக்' அமிலத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தாதியர் சங்கத் தலைவர் மெடிவத்த தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள எந்தவொரு அரச மருத்துவமனைகளிலும் இந்த அமிலம் இல்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலர் நவவியிடம் இது தொடர்பாகவினவப்பட்ட போது, இது சம்பந்தமாக இதுவரை எதுவித முறைப்பாடும்கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (எ-25-6)



## விஜயதாஸவுக்கு தடை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 4

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக விஜயதாஸ ராஜபக்ச செயற்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நேற்று நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்தத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. வழக்கு எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-இ)

## சிமெந்து விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 4

50 கிலோ எடையுள்ள சிமெந்து மூடையின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என்று சிமெந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விலை குறைப்பு இந்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்றும், இதன்படி 50 கிலோ கிராம் மூடையின் அதிகபட்ச சில்லறை விலை 2 ஆயிரத்து 250 ரூபாவாகும் எனவும் சிமெந்து நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. (எ-இ)

# நியமனங்களை எதிர்பார்த்து காத்திருக்கும் மருத்துவர்கள்!

உள்ளகப் பயிற்சியைப் பூர்த்திசெய்த ஆயிரத்து 390 மருத்துவர்கள் நியமனங்களை எதிர்பார்த்து காத்திருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்குரிய நியமனங்களை வழங்குவதற்கு சுகாதார முகாமைத்துவசேவை ஆணைக்குழு பின்னடித்து வருகிறது. இது பற்றி ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவர்களது நியமனம் தொடர்பாகசாதகமானபதில்கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார். (எ-25-6)

**நாளை**

05.06.2024

புதன்கிழமை

வைகாசி - 23

சுபநேரம் : 04.22 - 05.52

ராகுகாலம் : 11.52 - 01.22


**நாளொரு நல்வார்த்தை**

அசாதாரணமான வாய்ப்புகளுக்காக காத்திருக்க வேண்டாம்; பொதுவான சந்தர்ப்பங்களை கைப்பற்றி அவற்றை சிறந்ததாக மாற்றுங்கள்

-ஓரிசன் ஸ்வெட் மார்டென்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**
வி.ஆர்த்திகன் - 3ஏ, ரா.சேந்தன் - 2ஏபி, ஜெ.சிந்துயன் - பி2சி, த. தஸ்வின் - 3சி, வி.சாருஜன் - சி2எஸ்

**பௌதீக விஞ்ஞானப் பிரிவு**
நா.ஹரீஷன் - 3ஏ, ஜெ.அஜய் - 3ஏ, ந.நிருஷன் - 2ஏபி, ந.கபீசன் - ஏ2பி, சி.சந்தோஷன் - ஏபிசி, டி.டானியல் - பி2சி, உ.ஜீவதாஸ் - பி2எஸ், ஜெ.சண்முகப்பிரியன் - 3சி, லெ.சந்தோஷ் - சி2எஸ், ச.டினிஸ்காந் - சி2எஸ்

**வணிகப் பிரிவு**
சு.சானுஜன் - 3ஏ, றெ.பேனயா - ஏ2பி, பு.நிரோஜ் - ஏபிசி, ஜெ.சிவசங்கர் - 2பிசி, கி.பிரதீபன் - 3சி, சி.ஆன்ரியூ சத்ரக் - 2சிஎஸ், கா.ஞானதீபன் - 2சிஎஸ்

**தொழில்நுட்பப் பிரிவு**
வை.வினுஜன் - 3பி, என்.பிரசோத் - பி2சி, ஆர்.பிரசாந் - பி2சி

**கலைப்பிரிவு**
வே.சரன் - 2ஏபி, ச.வருண்சர்மா - ஏபிசி, றொ.ம.வ.அஜய் - ஏசிஎஸ் (எ-27)

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**உயிரியல் பிரிவு**
வி.ஜீவிதன் - 3ஏ, எஸ்.ஸ்ரோபன்ராஜ் - 3ஏ, ஆர்.டெனிசன் - 2ஏபி, ஏ.பி.ஜொனதன் - ஏ2சி, ஜே.சி. ஒயர்ஸ்டெப் - 3சி, பி.பெனிலோ -3சி

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு**
பி.அபிராம் - பி2சி, ஜே.வி. ஜெப்ரீ - சி2எஸ்

## மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**கணிதப்பிரிவு**
ம.டினோஜன் - 3ஏ, கு.துவாரகன் - பி2சி, வ.கஜிந்தன் - 3சி, க.கனுசிகன் - ஏபிசி

**உயிரியல் விஞ்ஞானப்பிரிவு**
சி.சாருண்ஜா - 2ஏபி, அ.தர்மினா - ஏ2சி, சி.ஜோன் ஜெனாத் - ஏ2சி, அ.அபிநயா - பி2சி

**வணிகப்பிரிவு**
செ.தர்சினி - ஏபிசி, தி.சதுராஜ் - பி2சி, லி.டெனுஷா - 3சி, ந.லக்ஷனா - 3சி

**கலைப்பிரிவு**
க.கஜானா - 3ஏ, ந.லக்ஷனா - 3ஏ, தெ.சியாணா - 3ஏ, செ.நிருஜா - 3ஏ, வி.ஜசோகா - 3ஏ, சி.அம்சனா - 3ஏ, ந.மேனுஜா - 3ஏ, ச.சங்கவி - 3ஏ, தி.கிருஷிகன் - 3ஏ, ப.கம்சிகா - 3ஏ, ந.தக்ஷன் - 2ஏபி, ஜோ.கிஷானா - 2ஏபி, தி.ஆர்த்திகன் - 2ஏபி, செ.சர்மிளா - 2ஏபி, அ.நிக்ஷனா - ஏ2பி, செ.சுஜீபா - ஏ2பி, து.கிஷோர் - ஏ2பி, த.செந்தூரதேவி - ஏ2பி, ர.பவிதா - ஏ2பி, ஜெ.தட்ஷாயினி - ஏ2பி, சி.டிலக்ஷன் - ஏ2பி, தே.ஆதித்தன் - 2ஏசி, சு.சுதர்சிகா - ஏ2சி, ப.தனுசிகன் - ஏ2சி, ஜெ.கருணதீபா - ஏ2சி, ஸ்ரீ.பிரசாந்தினி - ஏ2சி, கா.பவிதா - 3பி, ம.உசாந்தன் - 3பி, க.கம்சன் - 3பி, பொ. பிரியங்கா - 3பி, க.றினோஜா - 2பிசி, சி.இளவேனி - 2பிசி, ஜெ.கௌசிகன் - 2பிசி, சி.தேனுகா - 2பிசி, த.தேனுகா - பி2சி, சி.விதுஸா - பி2சி, உ.சன்வீன் - பி2சி, ப.ஜெனீபா - 3சி, உ.பாவலன் - 3சி, கோ.அபிஷா - 3சி, செ.அனுசியா - 3சி, ஸ்ரீ.சரண்யா - 3சி, ப.கஜலக்ஷன் - 3சி

## கிளிநொச்சி மத்திய கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப்பிரிவு**
பா.எழில்வதனன் - ஏ2பி, த.தனுஜன் - ஏபிசி, அ.அலெக்ஸ் - பி2சி, சி.சிவதாரணி- பிசிஎஸ், ஸ்ரீ.ஓவிஜாயினி பி2சி, க.சாகித்தியா 2பிசி

**பௌதிக விஞ்ஞானப்பிரிவு**
க.அபிநயன் - 3சி, வி.கலைப்பிரியன் - 2சிஎஸ், ஸ்ரீ.சங்கீர்த்தன் - 2ஏபி, த. கலையரசன் - ஏ2சி, கே.பங்கஜன் - ஏ2பி, வ.வசீகரன் - ஏ2பி, பி.அன்ரன்பிரசன்னா - 2ஏபி, த.சீர்நிலவன் - 3சி, சி.சானுஜா - ஏபிசி, உ.வினுத்தா 3சி

**உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பம்**
ச.விதுசிகன் - 3எஸ், ச.கார்த்திக் - பிசிஎஸ், தி.சமுத்திரன் - 3எஸ், ச.காவியா - சி2எஸ், ர.கிருத்திகா - சி2எஸ், வ. கோபிகா - 3எஸ்

**பொறியியல் முறைமைகள் தொழில்நுட்பம்**
ந.தமிழரசன் - 2சிஎஸ், கி.பிரணவன் - பி2எஸ், மு.பவித்திரன் - சி2எஸ், மு.தரணிகன் - 3எஸ், சீராளன் - 3சி, து.நிருஜன் - 3எஸ், ஜெ.அனுசன் - சி2எஸ், சி.தர்சன் - சி2எஸ், தி.தனுஜன் - 3எஸ், க.இனியவள் - 2சிஎஸ்

**வணிகப்பிரிவு**
கு.சயந்தன் - ஏ2சி, தெ.சுவேனி - ஏ2பி

# புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தலையீட்டைத் தடுக்கமுடியாது

### அலி சப்ரிக்கு தவராசா பதிலடி

கொழும்பு, ஜூன் 4

ஒரு நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள்தான் அந்த நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் அடிப்படை விடயங்களில் பெரும் செல்வாக்கு செலுத்தும் சக்தியாக இருப்பர். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பில் அண்மையில் பொறுப்பற்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

-இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த நாட்டின் அரசியலில் தலையிடக்கூடாது என்று அண்மையில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தை, யாரைத் திருப்திப்படுத்த அவர் முன்வைத்தார் என்பது ஊகிக்க முடியாத ஒரு விடயம் அல்ல.

பலஸ்தீனத்தின், ராபா நகர் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களுக்கு எதிராக இன்று அனைவரது கண்களும் குவிக்கப்பட்டுள்ளன. இந்த அநீதிகளை உலகறியச் செய்ததில் பலஸ்தீனத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற மக்களின் பங்களிப்பு மிகப்பெரியது. இந்த விவகாரத்தை வெளிவிவகார அமைச்சர் எவ்வாறு அணுகுவார் என்பதை அறிய விரும்புகின்றேன்.

பலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் அத்துமீறல்களை பலஸ்தீன புலம்பெயர் மக்கள் கண்டும், காணாது சகித்துக்கொள்ளவேண்டும் என்று அவர் நினைக்கின்றாரா? இஸ்ரேலின் அத்துமீறல்களை ஏற்றுக்கொள்ளாத அமைச்சர் அலி சப்ரி, ஈழத் தமிழர்கள் விடயத்தில் மெத்தனமாக நடந்துகொள்வது எந்தவகையில் நியாயமானது?

தனக்குத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், பலம்மிக்க அமைச்சுப் பதவியையும் தந்தமைக்காக சிங்களத்தைத் திருப்திப்படுத்தும் வேலைகளை அவர் செய்துகொள்ளலாம். ஆனால் தமிழ் மக்கள் உரிமைகளின் மீதும், தமிழ் மக்களின் இருப்பின்மீதும், அபிலாஷைகள் மீதும், கனவுகள் மீதும் கைவைக்க அவருக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்தபோது புலம்பெயர் தமிழர்களின் முதலீடும், பொருளாதார ஒத்துழைப்பும் தேவையாகவிருந்தது. ஆனால் புலம்பெயர் தமிழ் மக்கள் இந்த நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஒட்டுமொத்த தேசியத்தின் குரலாக எப்போதும் புலம்பெயர் தமிழர்கள் இருப்பார்கள். விருப்பம் இல்லாவிட்டாலும் அந்தக் குரலை அனைவரும் செவிமடுத்துத் தான் ஆகவேண்டும் ஆக்கபூர்வமான அழுத்தம் மிக்க சக்தியாக புலம்பெயர் தமிழர்கள் ஈழத்து அரசியலில் தாக்கம் செலுத்திக் கொண்டே இருப்பார்கள் என்பதை இத்தகைய பொறுப்பற்ற அரசியல்வாதிகள் கருத்தில்கொண்டு செயற்படவேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

# தேர்தலை ஒத்திவைக்க பெரமுன இடமளிக்காது

### நாமல் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 4

தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி இடமளிக்காது. உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஆதரவு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை தற்போதைய ஜனாதிபதிக்கு மொட்டுக் கட்சி வழங்கவில்லை. அடுத்த தேர்தல்வரை மட்டுமே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படும் என்ற உறுதிமொழியை மட்டுமே நாம் வழங்கி இருந்தோம்.

கொள்கை ரீதியிலான பல விடயங்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து, வெற்றி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கப்படும். தற்போதைய ஜனாதிபதி என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவுக்காகவும் நாம் காத்திருக்கின்றோம். முன்கூட்டியே எமது முடிவை அறிவித்தால் அரசியல் ஸ்திரமற்ற தன்மை ஏற்படக்கூடும். எந்தவொரு தேர்தல்களையும் எதிர்கொள்வதற்கு நாம் தயார், மாறாக தேர்தல்களை பிற்போடுவதற்கு இடமளிக்க மாட்டோம் - என்றார். (எ-25-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஜூன் 4

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவு, சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

---

யாழ்ப்பாணம், ஜூன் 4

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் 'ஞானப்பழம்' என்னும் விடயப்பொருளில் கலாநிதி ஏ. அனுசாந்தனின்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)

## வருடாந்த விளையாட்டு விழா

காரைநகர் பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுவிழா, காரைநகர் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் காரைநகர் பிரதேச செயலர் ந.ரஞ்சனா தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிகச் செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி, வேலணைப் பிரதேச செயலர் க.சிவகரன், சங்கானைப் பிரதேச செயலர் திருமதி உ.கவிதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)


**வேலையாட்கள் தேவை**

வவுனியாவில் அமைந்துள்ள உயர்தர உணவகத்திற்கும், சுப்பர் மார்க்கற்றுக்கும் பின்வரும் பணியாளர்கள் தேவை.

- ரொட்டி, சிற்றுண்டி தயாரிப்பாளர்
- நாண், பேப்பர் தோசை தயாரிப்பாளர்
- காசாளர்
- உணவு பரிமாறுபவர் (பெண்கள் மட்டும்)

பொருத்தமானவர்களுக்கு கொமிசன் அடிப்படையிலும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 604 0373


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12 . 02 . 1933

மறைவு 16 . 05 . 2024

அன்பான ஆதரவான ஆசீர்வதிக்கும் ஆசிரியர்

**கே.எஸ். திசைராசா**

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தமிழாசிரியராய், சாரணர் இயக்க வழிகாட்டியாய் 1971 முதல் 1978 வரை

"தீச்சுடர் மேலெழும்
செந்நிறம் பரவிடும்"

நல்லடக்கம் 04.06.2024 சிட்னி, அவுஸ்திரேலியா.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி சாரணர் 1971-1978**

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 . 12 . 1997

உதிர்வு 15 . 06 . 2023

**அமரர் ஜனார்த்தனன் கனிஸ்ரா**

"கடவுள் காகிதம் என்று நினைத்து
அழகிய கவிதை ஒன்றைக் கிழித்துவிட்டான்"
பிரம்மன் எழுதிவைத்த மண்ணில் வந்த கவிதை யொன்றை
படிக்கும் முன்பே பாதியிலே கிழித்ததேனோ இறைவா!
பொட்டு வைத்த வண்ண நிலவொன்று
எம்மையெல்லாம் விட்டுச் சென்றதேனோ!
சிட்டுக் குருவியாய் சிறகடித்த சிலையொன்று
எம் நெஞ்சையெல்லாம் சிறைப்படுத்தி சென்றதேனோ!
அள்ளி அள்ளி அன்பைத்தந்த பூவொன்று
வாடி நிலத்தில் வீழ்ந்ததேனோ!
உன் பட்டுப் பாதம் நடந்த பாதை இன்று
பாவை உன் வருகை இன்றி பதறுகின்றது
வாழும் வயதினில் வாசமலர் ஒன்றின்
வண்ணம் கலைத்ததேனோ இறைவா!
நீ மீண்டு வருவாயென நாம் வேண்டாத தெய்வமில்லை
இருந்தும் மீண்டும் இந்த மண்ணில் வருவாயென
நித்தம் நித்தம் உன் அழகிய நினைவுகளை சுமந்தபடி
ஓராண்டல்ல நாம் உயிர் வாழும் காலம் வரை

மூளாய் வேரம்,
மூளாய்.

உம் நினைவுகளுடன்
அன்புக் கணவர் - பு. ஜனார்த்தனன் (ஜனா)

(CR/42563) J-1


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

**A/L 2026 ஆண்டிற்கான கலைப்பிரிவு**

து.லக்ஷிகா - அரசியல்
P.லக்ஷன் - வரலாறு.
ச.பிரஷாத் - மீடியா (Media)

குமரேன் கட்ட மாடி, சங்கானை.

தொடர்பு: 077 675 1649

(CS/55251) J-1


## சேவை நலன் பாராட்டு விழா

(04.06.2024)




**கிருஸ்ணநாதன் நகுலதாஸ்**

(சமுர்த்தி வங்கி முகாமையாளர் - பருத்தித்துறை)

பருத்தி மண்ணில் பார் போற்ற
பக்குவமாய் எட்டு ஆண்டுகள்
பணியாற்றிய எம் அருமை - முகாமையாளரே
இனியும் உங்கள் சேவை தொடர எமது வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:
**கட்டுப்பாட்டுச் சபை நிர்வாகம்**
**பருத்தித்துறை சமுர்த்தி வங்கி**

(CS/28138) J-1

## கேள்வி கோரல் - 2024

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சிற்றுண்டிச்சாலை**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் நடாத்துவதற்குப் பொருத்தமான ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல்கள் வரவேற்கப்படுகின்றன.

கேள்வி கோரல்களுக்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத செலுத்துகையான ரூபா 1000 ஐ 04.06.2024 ஆந் திகதி முதல் 20.06.2024 ஆந் திகதி வரை முற்பகல் 9.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையில் கல்லூரி அலுவலகத்தில் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை தகைமை, அனுபவ நற்சான்றிதழ்களுடன், பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம், என்ற முகவரியில் 20.06.2024 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில்" சிற்றுண்டிச்சாலை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் - 2024" எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

கிடைத்த கேள்விகோரல்கள் யாவும் 22.06.2024 ஆந் திகதி பி.ப 2.30 மணிக்குத் திறக்கப்பட்டு தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.

**பிற்குறிப்பு :**

முற்று முழுதாகத் தரமான, ஆரோக்கிய உணவு வகைகளை (Healthy Foods) வழங்க முன்வரும் ஒப்பந்தகாரருக்கு எமது கட்டணத்தில் பொருத்தமான விலக்கு அளிக்கப்படும்.

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**
021 222 2431

(cr.42562) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

**யூனியன் கல்லூரியின் முன்னாள் பொற்கால அதிபர்**

**அமரர்**

## கதிர்காமர் பாலசுந்தரம்



1979 - 1986 வரை யூனியன் கல்லூரியின் புகழ்பூத்த பொற்கால அதிபராக கடமையாற்றி ஓய்வின் பின்னரும் 38 வருடங்களாக பாடசாலை வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய அதிபர் அவர்கள் இன்று எம்மோடு இல்லை அன்னாரது ஆத்மா சாந்தியடைய புவனேஸ்வரி அம்பாள் பாதங்களை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

**06.06.2024 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். அந்நிகழ்வில் கல்லூரிச் சமூகத்தோடு முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளவும்.**

பிறப்பு 14.01.1928

இறப்பு 01.06.2024

**யூனியன் கல்லூரிச் சமூகம்**

(CS/55256) J-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 09 . 11 . 1939

மறைவு 15 . 06 . 2023

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் ஆறுப்பிள்ளை நடராசா**

**(இராமகிருஷ்ணன் - ஓய்வுபெற்ற அதிபர்)**

தலைவனாய் தரணி போற்றும் தந்தையாய்
நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே
நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெம்மை
வாழவைத்த தெய்வமே
என்றினி உங்கள் எழில் வதனம் காண்போம்.

இல. 78, லக்சபான வீதி,
மகாறம்பைக் குளம், வவுனியா.

பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(CS/55257) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தலுக்கு எதிராக உண்டியல் சேமிப்பு நிகழ்வு



பளை, ஜூன் 4

சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு, 'நண்பா போதைக்கு முற்றுப் புள்ளி வைப்போம் வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் உண்டியல் சேமிப்பு நிகழ்வு, பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வு, பச்சிலைப்பள்ளி சமுர்த்தி சமுதாய மட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (ப-9)



## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!

முல்லைத்தீவு, ஜூன் 4

முள்ளியவளை - கணுக்கேணிப் பகுதியில் அமைந்துள்ள அவுஸ்திரேலியன் தமிழ் யூனியன் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட தையல் பயிற்சி மற்றும் கணினிப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இணைப்பாளர் காண்டீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக செயலர் சி.குணபாலன் கலந்து கொண்டார். (ப-19)



## பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முஸ்லிம் மாணவன்!

திருகோணமலை, ஜூன் 4

பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முதலாவது முஸ்லிம் என்ற பெருமையுடன் உலக சாதனை படைக்கும் நோக்கில், திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவன் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றமை பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த 15 வயதுடைய எஃப். ஹஸன் ஸலாமா என்ற மாணவன், குறித்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவர், 'கடல் வாழ் உயிரினங்கள், முருகை கற்பாறைகளைப் பாதுகாத்தல் மற்றும் கடலில் சேரும் பிளாஸ்ரிக், பொலித்தீன் ஆகியவற்றுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தல்' என்ற தொனிப்பொருளில், எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி பாக்குநீரிணையை 8 மணித்தியாலங்களில் நீந்திக் கடக்கவுள்ளார். (ப-100)

## தென்மராட்சி சந்தைகளில் கழுவுவதற்குத் தடை; மண்ணுடன் 'கரட்'!

யாழ்ப்பாணம், ஜூன் 4

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில், கரட்டை கழுவி விற்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதால் அவை மண்ணுடன் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

வியாபாரிகளிடம் இதுதொடர்பாகக் கேட்டதற்கு, தம்புள்ளயிலிருந்து கொண்டுவரப்படும் கரட் மண்ணுடன் காணப்படும். இவ்வளவு நாளும், அதனை சந்தையிலுள்ள தண்ணீர்க்குழாயில் கழுவிச் சுத்தம் செய்து விற்பனை செய்து வந்ததாகவும், தற்போது சந்தையிலுள்ள தண்ணீர்க் குழாயில் கழுவுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாலேயே, அவற்றைக் கழுவாமல் மண்ணுடன் விற்பனை செய்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கேட்டபோது, 'மரக்கறிகளை வியாபாரிகள் தண்ணீர்க் குழாயில் கழுவிவிட்டு, குழாய்த்தொட்டியை சுத்தம் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டு வருவதாலேயே கழுவுவதற்குத் தடைவிதிக்கப்பட்டது' எனத் தெரிவித்தார். (ப-9)





## புகைத்தலுக்கு எதிரான கூட்டமும் நடைபவனியும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, வேலணைப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'போதையற்ற தேசத்தைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நடைபவனியும், கூட்டமும் வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் வேலணையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் வேலணை உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர், வேலணை சமுர்த்தி வங்கி முகாமையாளர், சிறைச்சாலை அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத் துணை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுதாய மட்ட மற்றும் பிரதேச மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-66)

## புகையிலை நிறுவனங்களுக்கு எதிராக இளைஞர்கள் முன்னெடுத்த நடவடிக்கை

மன்னார், ஜூன் 4

சர்வதேச புகைத்தல் தினத்தை முன்னிட்டு, 'புகையிலை நிறுவனத்தின் தந்திரோபாயங்களிலிருந்து சிறுவர்களையும், இளைஞர்களையும் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்வு, யான் சிறிலங்கா மற்றும் எ.டி.ஐ.சி. அமைப்பின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜெருஷன் தலைமையில் இடம்பெற்றது.

தேசியரீதியில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. அதன் ஒருபகுதியாக, மக்கள் மத்தியில் புரிதல் நிலையை ஏற்படுத்தும் வகையில் மன்னார் மாவட்ட இளைஞர்கள் இணைந்து, மாவட்டத்தில் காணப்படும் கடைத் தொகுதிகள், பொதுப் பேருந்து தரிப்பிடம் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப-213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன். சிவகுமாரனின் நினைவேந்தல் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஈழத் தமிழின விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியும், முதற் தற்கொடையாளருமான தியாகி பொன்.சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள பொன்.சிவகுமாரனின் நினைவிடத்தில் தியாகி பொன். சிவகுமாரன் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

பொன்.சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி ஈகச் சுடரேற்றி நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். அதனைத்தொடர்ந்து அஞ்சலிநிகழ்வுகளும், நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும். நிகழ்வில் உரும்பிராயைச் சேர்ந்த பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 50 பேருக்குப் புத்தாடைகள் வழங்கி வைக்கப்படவுள்ளன. அத்துடன் சிவகுமாரனின் உருவச்சிலைக்கு முன்பாகத் தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டு மக்களின் தாகம் தீர்க்கும் பணியும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை- தியாகி பொன். சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொண்டு அஞ்சலிக்குமாறு தியாகி பொன்.சிவகு மாரன் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(அ-ம-66)

# பட்டதாரி ஆசிரியர்கள் இன்று கடமையேற்கலாம்

வடக்கு மாகாணத்தில் அண்மையில் புதிதாக நியமனம் பெற்றுக்கொண்ட 374 பட்டதாரி ஆசிரியர்களும் இன்று செவ்வாய்க்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்க முடியுமென வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலர் பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நேற்றுத் திங்கட்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், சீரற்ற காலநிலை காரணமாக நேற்றையதினம் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இன்று பாடசாலைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக நியமிக்கப்பட்ட அனைத்துப் பட்டதாரி ஆசிரியர்களும் தங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-66-26)


## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 03 . 1945



இறப்பு 03 . 06 . 2024

### சிவசுப்பிரமணியம் வைரமுத்து

யாழ், மயிலங்கூடலை பிறப்பிடமாகவும் யாழ் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் வைரமுத்து அவர்கள் நேற்று (03.06.2024) திங்கட்கிழமை அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து-செல்லமா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுசிலாதேவியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற கந்தையா-சிவஞானம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியம், ராஜலக்ஷமி, காலஞ்சென்ற செல்வலக்ஷமி, காலஞ்சென்ற யோகலக்ஷமி மற்றும் நமசிவாயம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நித்தியானந்தம், காலஞ்சென்ற விஜயநாதன், காலஞ்சென்ற பரமலிங்கம், காலஞ்சென்ற குணசிங்கம், கேசரிலோசன் மற்றும் சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோமேஸ்வரானந்தன், காலஞ்சென்ற சகுந்தலாதேவி, புனிதவதி, காலஞ்சென்ற குகனேசன், மற்றும் குமரேசன், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலாம்பிகை, காலஞ்சென்ற உத்தமலிங்கம், காலஞ்சென்ற கனகரத்தினம், இந்திராதேவி, ராஜினி, காலஞ்சென்ற அருணக்குமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ் மானிப்பாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 653) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 07 . 1938



மறைவு 03 . 06 . 2024

### சிவஸ்ரீ சோம சிவசுப்பிரமணிய ஐயர்

ஆனைக்கோட்டை கரைப்பிரான்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சோம சிவசுப்பிரமணிய ஐயர் (ஓய்வுபெற்ற பிரதான கணக்காளர் அபான்ஸ் நிறுவனம்) நேற்று (03-07-2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சோமசுந்தரக்குருக்கள் இரத்தினம்பாள் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் இராஜேஸ்வரி, பாலசரஸ்வதி (குணம்), சிவகுமாரக்குருக்கள் ஆகியோரின் சகோதரனும் மயூரசர்மன், மயூரிக்கா ஆகியோரின் பெரிய தந்தையும் அரவிந்தசர்மா (றமேஸ்), கோவர்த்தனக்குருக்கள், இந்துஷா (உஷா), ஐங்கரசர்மா, ஆனந்தபாபுசர்மா ஆகியோரின் மாமனாரும் ரங்கராஜசர்மா, சுதாமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-06-2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 260 1673

தகவல்:
சோமசிவகுமாரக்குருக்கள்
(சகோதரர்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 11 . 1939



மறைவு 02 . 06 . 2024

### திருமதி நடராசா மகேஸ்வரி

கரவெட்டியை பிறப்பிடமாகவும் கல்வயலையும் சங்கத்தானையையும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி நடராசா அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02.06.2024) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு அருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் (பிரதம லிகிதர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, றட்னேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் கிருபாகரன் (லண்டன்), பகீரதி (ஆசிரியை மிருசுவில் றோ.க.த.க பாடசாலை), கருணாகரன் (பொறியலாளர் அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் Nguyen Thi Bich, குகஆனந்தன் (ஓய்வு பெற்ற நீதிமன்ற கட்டளைச் சேவகர்), சிவஅனுஷா (பொறியியலாளர் அமெரிக்கா), ஆகியோரின் அன்பு மாமியும் கோபிகா (மாணவி சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ஆருத்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05.06.2024 (புதன்கிழமை) மு.ப. 9.30 மணிக்கு சங்கத்தானையில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

24/1 சுங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 740 5446, 077 531 8431

(CS 42564) V-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# இளையதலைமுறை ஆற்றலாளர் இருவருக்கு விருது வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் 63 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அறநிதியச் சபை ஏற்பாடு செய்த 'இளையதலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் ஞா.காந்திஜி,13 வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டிய திருகோணமலை கோணேஸ்வராக் கல்லூரி மாணவன் ஹரிகரன் தன்வந்துக்கு, இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது இருவருக்கும் வழங்கப்பட்டது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.
(ப-66)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந்திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதை முன்னிட்டுக் கொடியேற்றத் திருவிழா உபயகாரர்களால், ஆலயமஹோற்சவக் குருமணியிடம் கொடிச்சீலை கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.
(எ-25-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் 317 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (எ-25-66)

# மணிவண்ணனின் வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்றைய தினம் நிராகரிக்கப்பட்டது.

இந்த ஆண்டு அறிமுகமான நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்களை அவமதிக்கும் சட்ட ஏற்பாட்டின் கீழ் நீதிமன்றை அவமதித்தார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக மாநகரசபையின் முன்னாள் மேயரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணனால் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் கடந்த மாதம் 22ஆம் திகதி மாநகர சபை ஆணையாளர் சார்பில் சட்டத்தரணி பிரியங்கா தர்மகுலசிங்கத்தின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் தோன்றியிருந்தார்.

இவ்வழக்கானது சிறுகோரிக்கை நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எனவும் சிறுகோரிக்கை நீதிமன்றிலேயே தாக்கல்செய்யப்பட வேண்டுமே அன்றி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்ய முடியாது எனவும், இந்த வழக்கை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றத்துக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். கட்டளைக்காக வழக்கு நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கை ஆராய்ந்த மாவட்ட நீதிபதி சி.சதீஸ்கரன், இவ் வழக்கானது தவறாக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டமையால், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த ஆட்சேபனையை சரியென சுட்டிக்காட்டி வழக்கை தள்ளுபடி செய்தார்.
(ஒ-இ)





# பசுவதைக்கு எதிராக அராலியில் போராட்டம்!

ஏழை மக்களின் பசுக்கள், மாடுகள் கடத்தப்பட்டுச் சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காகப் படுகொலை செய்யப்படுவதை நிறுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியும், இலங்கையில் 'பசுவதைத் தடைச் சட்டத்தை' நடைமுறைப்படுத்த வலியுறுத்தியும் அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உருத்திரசேனை அமைப்பு மற்றும் அராலி தெற்கு வாழ் பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்த அறவழிப்போராட்டம், அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரர் பிள்ளையார் கோவில் வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வடமாகாண அரச சாரதிகள் தொடர் போராட்டத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடமாகாண அரச சாரதிகள் சங்கம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வடமாகாணத்தில் 5 வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளுக்கான இடமாற்றத்துக்கு பிரதிப் பிரதம செயலரால், கடந்த வருடம் விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்றப் பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது. ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய அந்த இடமாற்றம் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்த அரச சாரதிகள் கடந்த பெப்ரவரி மாதத்தில் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தனர். இடை நிறுத்தப்பட்ட இடமாற்றம், ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதிப் பிரதம செயலரால் எழுத்துமூலம் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், அரச சாரதிகள் சங்கம் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பித்த போராட்டத்தை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர உள்ளனர். ஆளுநர் அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச சாரதிகள் சங்கம், ஆளுநருக்கான மகஜரை அவரின் பிரதிநிதியிடம் கையளித்த பின்னர் கைதடியில் அமைந்துள்ள பிரதம செயலர் அலுவலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஓ-25-20-27)

# நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவானது

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நயினாதீவிலேயே நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் நேற்றுக் காலை வரையான 24 மணிநேரத்தில் கூடுதலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 24 மணி நேரத்தில் யாழ். மாவட்டத்தில் நயினாதீவில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக 58.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்தனர்.

குறித்த காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் 43.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 43.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ். நகரப் பகுதியில் 34.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 32.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 29.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-66)

## எரிவாயு...

நடைமுறைக்கும் வரும் வகையில் குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். திருத்தப்பட்ட விலைகள் தொடர்பான விவரம் இன்று அறிவிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-66)

## தேர்தலைப்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்துச் செயற்படுவதற்கு ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியும் முழுமையான இணக்கத்தை வெளியிட்டுள்ளன. அதேவேளை பொதுவேட்பாளரை வர்த்தக சங்கங்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகள் ஆதரித்துள்ளன.

இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாண்டால் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனச் சிந்தித்து விரைவாக முடிவெடுக்கவேண்டும். ஆதலால், முடிவுகளைப் பிற்போட்டுகாலம்தாழ்த்தி முடிவெடுப்பது தமிழர் நலன் சார்ந்ததாக இருக்காது.

பொதுவேட்பாளர் விவகாரம் தோற்றுப் போகவேண்டும் எனப் பலர் விரும்புகின்றார்கள். அதில் சி.வீ.கே.சிவஞானமும் ஒருவராக இருக்கலாம். இந்த விடயம் வெற்றிகரமாக நடந்தேறினால், சிங்களத் தரப்பு மாத்திரம் அல்ல சர்வதேச சமூகம்கூட தமிழ் மக்களுடைய அந்த ஆணை பற்றிச் சிந்திக்கவேண்டிய ஒரு சூழல் ஏற்படும்.

இதற்கிடையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுவேட்பாளரும், தேர்தல் புறக்கணிப்பும் ஒன்றுதான் என்று மக்களிடம் சொல்லி வருகின்றது. அது உண்மையில்லை, இரண்டும் வெவ்வேறானவை.

இலங்கையில் இருப்பது வெறுமனே ஒரு பொருளாதாரப் பிரச்சினை. அதைத் தீர்த்துவிட்டால் அனைத்துப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் இலங்கையிலும் சர்வதேசத்துக்கும் சொல்லிக்கொண்டிருக்கின்றது. தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது என்பதை உலகறியச் செய்யவும் சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கவேண்டும். அந்த ஆணைக்காக தமிழ் மக்கள் பெருமெடுப்பில் வாக்களிக்கும்போது அதை கவனிக்கவேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படும். எனவே தேர்தல் புறக்கணிப்பும், தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆணையும் வேறுவேறானவை - என்றார். (அ-ஒ-இ)

## உயர்தர...

உயர்தர வகுப்புகளை பாடசாலைகளில் ஆரம்பித்து மாணவரின் வரவை தற்காலிகப் பதிவேட்டில் பதிவுசெய்து அந்தந்தப் பாடசாலையில் கற்ற மாணவர்களினதும் வேறு பாடசாலையிலிருந்து அந்தந்தப் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களினதும் விவரத்தைப் பெற்று மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பாடத்துறைகளுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்ட காலப் பகுதியினுள் வருகைதந்த நாள்களின் எண்ணிக்கையானது, க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும்போது 80 சதவீத வரவு கருத்தில் கொள்ளப்படும்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. உயர் தரத்தில் கற்பதற்காக வேறு பாடசாலையொன்றுக்கு அனுமதி பெற்றுக் கொள்ளும்போது இந்தத் தற்காலிக இணைப்புக்கு அமைய ஏதேனும் ஒரு பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டு கற்றிருப்பது முன்னுரிமை வழங்கப்படும் விடயமாகக் கருத்தில் கொள்ளப்படும்.

அதன்படி, மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பெறுபேறுகளின்படி வேறு பாடசாலையொன்றுக்கு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில், இணைப்புக் கால எல்லையினுள் பாடசாலை வரவு மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை, தற்காலிகமாக இணைப்பு பெற்றுள்ள பாடசாலை அதிபர்கள் வழங்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும் என்பதுடன் அதனை மேலதிக தகுதியொன்றாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்காகவும் இந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தமுடியும்.

அத்துடன் வசதிகள் மற்றும் சேவைகள் கட்டணம், சீருடைகள் மற்றும் மாணவர் விடுகைப் பத்திரம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பில் சுற்றறிக்கைக்கு அமைவாக விசேட கவனம் செலுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும் எனவும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-ஒ-26)

## மோடியின்...

உலகளவில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக இடம்பெற்றிருந்தது. ஏழாவதும் இறுதியானதுமான வாக்குப் பதிவுகள் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றன. இந்த நிலையில், இன்று காலைமுதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

இந்தியாவில் மொத்தமாக 543 தேர்தல் தொகுதிகள் உள்ளன. இவற்றில் 272 தொகுதிகளில் எந்தக் கட்சி வெற்றிபெறுகின்றதோ அந்தக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும். தேர்தலுக்குப் பின்னராக வாக்குப்பதிவுகள் 350 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றிபெறும் என்பதைக் காட்டுவதாகவே அமைந்துள்ளன. பா.ஜ.க.வின் முக்கியஸ்தரும், இந்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா 400 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றிபெறும் என்று தெரிவித்துள்ளார். ஆனால், இந்தக் கருத்துக்கணிப்புகள் போலியானவை என்று தெரிவித்துள்ள இன்டியா கூட்டணியினர் தமது வெற்றி உறுதி என்றும் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## கைதான...

மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து போராட்டமொன்றை நடத்தியிருந்தனர். இதையடுத்து பொலிஸாரால் ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு ஏறாவூர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது பொலிஸார் போதிய சாட்சியங்களை முன்வைக்கத் தவறியமை, குற்றப்பத்திரிகையில் காணப்பட்ட முரண்பாடுகள் என்பன காரணமாக, வழக்கைக் கொண்டுநடத்த முகாந்தரங்கள் இல்லை என்றும் இதனால் மாணவர்கள் விடுவிக்கப்படுகின்றனர் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-27-26)

## பல்கலைக்கழக...

துள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத் தளத்திலிருந்து மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களைத் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம் எனவும், புத்தகசாலைகளில் முதற்படிவங்கள் விற்பனை செய்யப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவங்களைத் தரவிறக்கம் செய்து பிரதி செய்வதோ, விற்பனை செய்வதோ, விநியோகிப்பதோ, வேறு வர்த்தக நோக்கங்களுக்கு பயன்படுத்துவதோ சட்டப்படி குற்றம் எனவும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## கனடாவைச்...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கனடாவில் இருப்பவர்களிடம் தன்னை ஒரு மருத்துவர் என்று போலியாக அடையாளப்படுத்தியுள்ளார். தான் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் கனடாவுக்குச் செல்லவுள்ளதாகவும், யாழ். நகரில் தனக்கு காணி இருப்பதாகவும் தெரிவித்து, பொய்யான ஆவணங்களைத் தயாரித்து அனுப்பி ஒன்றரைக் கோடி ரூபாவை மோசடி செய்துள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றவிசாரணைப் பிரிவினரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து,

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி சந்தேகநபரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து ஒரு கோடியே 40 இலட்சம் ரூபா சொகுசுக் கார் ஒன்றும், 15 பவுண் நகைகளும், 5 இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேநபர் இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதுடன், சான்றுப் பொருள்களும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் முதல் நிலையைப் பெற்றுக் கொண்ட சில்லாலை, சாந்தைப் பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் வஜீனா என்ற மாணவியை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததுடன், அவருடைய பெற்றோருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (ம-125)

# முதல் ஆட்டத்திலேயே தோல்வியை தழுவிய இலங்கை

உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை 6 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்துள்ளது.

நியூயோர்க்கில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டம் மைதானப் பந்து வீச்சுக்கு சாதகமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

19.1 பந்துப் பரிமாற்றங்களிலேயே சகல இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ் 30 பந்துகளில் 19 ஓட்டங்களையும், மத்தியூஸ் 16 பந்துகளில் 16 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 15 பந்துகளில் 11 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களையே பெற்றனர். பந்து வீச்சில் அன்ரிச் நோரிஜே 7 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணியும் ஓட்டங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டது. அடித்தாட முடியாமல் இலங்கையைப் போலவே திண்றியது. சீரான இடைவெளிகளில் இலக்குகளும் வீழ்த்தப்பட்டன. குக் 27 பந்துகளில் 20 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். இறுதியில் கிளாசன் 19 ஓட்டங்களை ஏனையோரைவிட விரைவாகப் பெற்றுக்கொடுக்க 16.2 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. பந்து வீச்சில் ஹசரங்க 2 இலக்குகளையும், சானக, துஷார தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக நோரிஜே தெரிவானார். (ஒ-5)




## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/651) J-1

074 173 7684

## வாகனம் வாடகைக்கு

அலுமினியம் Body அடித்த பட்டாரக வாகனம்

வாடகைக்கு கொடுக்கப்படும்.

(சாரதியுடன் மாதவாடகைக்கு) (CS/55255) J-1

தொடர்பு:- 077 555 1174

## A/L தொழினுட்பப்பிரிவு

Techna
Technical Institute

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்

A/L 2026

04.06.2024 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு

செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன

A/L 2023 REPEAT BATCH

paper classses, Theory classes, செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன

விஷேட பிரிவுகள்

A/L 2024 பிரிவு
A/L 2025 பிரிவு

மேலதிக விபரங்களுக்கு 077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்

A-9 வீதி முகப்புடன் 38 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பதினெட்டடி பாதை (18).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது.

தொ: 077-029 4164
077-329 4130
077-294 1521

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு Store இனைப் பராமரிப்பதற்கும் (Store Keeper) purchasing செய்வதற்கும் மற்றும் Electrician க்கும் ஆட்கள் தேவை. (CS/654) J-1

076 760 0403, 077 990 6057

## மணமகள் தேவை

(V) இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் 11 ல் சூரியன் செவ்வாயை உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (CS/649) J-1

தொடர்பு :- 075 617 8008

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A/L 2023 DAY CLASS

(இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)

- திகதி - 07.06.2024
- நேரம் - 2.30 PM

தொடர்புகளுக்கு : 077 017 5346


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.